3rd March 1959]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப் பற்றித் தகவல் இல்லே. நிலைமையையும், தண்ணீரையும் பார்த்துத்தான் இந்த யோசனையை எடுத்துக் கொள்ள முடியும்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : There are certain strains of paddy which could be grown in water-logged areas. May I know whether the Government are trying those strains in such areas?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I want notice, Sir.

Rural Housing Society at Vedaranyam

* 537 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

வேதாரண்யத்தில் வீடு கட்டும் சொசைட்டி (Rural Housing Society) எப்போது ரெஜிஸ்டர் ஆயிற்று ?

The Hon. Sri R. VENKATARAMAN : "The Vedaranyam Rural Housing Society" was registered on 18th January 1957 and started in April 1957.

Sri A. VEDARATHNAM : அங்கே உதவி கோரி விண்ணப்பம் எப்பொழுது வந்தது? எப்பொழுது அவர்களுக்கு உதவி அளிக்கப்பட்டது? இவ்வளவு காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதில் மூன்று கடன்கள் பன்னிரண்டாயிரம் ரூபாய் அளவுக்குக் கொடுக்கப்பட்டு விட்டது பாக்கிக் கடன் மனுக்களெல்லாம் தவருக இருந்தன. அதாவது "டிபெக்டிவ் அப்ளிகேஷன்களாக" இருந்தன. அதனால் காலதாமதம் ஏற்பட்டது.

Sri A. VEDARATHNAM : ரூரல் ஹௌஸிங் சொஸைட்டிக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் செலவாகி விட்டதா? அதில் ஏதேனும் பயன்படுத்தாமல் இருக்கிறதா ? அதைப் பயன்படுத்திக் கொள்ள ஏதேனும் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : முதலிலே பட்ஜெட் ப்ரொவிஷன் இரண்டரை லட்ச ரூபாய். இதை மூன்று லட்ச ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அதில் எவ்வளவு செலவழித்திருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

Theni Co-operative Marketing Society.

* 538 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) தேனி கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு ஆண்டு தோறும் ஒதுக்கும் உரப்பொடி எவ்வளவு ?

(ஆ) ஒவ்வொரு பிளாக்கிற்கு இவ்வளவு என சப்ளை செய்யப்படுகிறதா அல்லது சொசைட்டிக்கு இவ்வளவு என பங்கிட்டுத் தரப்படுகிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The annual allotment of fertilisers to the Theni Co-operative Marketing Society is 89 tons.

(*b*) The allotments to the distributors of fertilisers are made on a taluk-wise basis.